**DEPOSITION OF WITNESS**

(Chapter XXII Code of Criminal Procedure)

**IN THE COURT OF PRINCIPAL DISTRICT AND SESSIONS JUDGE, PERAMBALUR.**

| | | | |
|---|---|---|---|
| Calender : | | Miscellaneous : | |
| Preliminary Register : | | Case No. : | **S.C.27/2020** |
| Sessions : | | | |
| Deposition of witness for : | | Prosecution : | **P.W.2** |
| | | Defence : | **D.W.** |
| | | Court : | **C.W.** |

| **Name :** | சுமதி | **S/o.(or)W/o. :** | |
|---|---|---|---|
| Village : | | Taluk : | |
| Calling : | | Age : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1872 of the day of **27.01.2026**

**1வது எதிரி ஆஜரில்லை. மனுதாக்கல் ஏற்பு. 2, 4எதிரிகள் ஆஜர் படுத்தப்பட்டார்கள். 3வது எதிரி ஆஜர்.**

**முதல் விசாரணை:**

நான் எம்.ஜி.ஆர் நகர் ஆலம்பாடி ரோடு, பெரம்பலூரில் குடியிருக்கிறேன். நான் தள்ளுவண்டியில் ஜட்டி, பனியன் விற்பனை செய்து வருகிறேன். வழக்கில்இறந்துபோன வீரமணிகண்டன் எனது தம்பி ஆவார். ஆஜர் எதிரிகளை தெரியும். எதிரி முருகானந்தத்தை தெரியும். அ.சா.1 என்தம்பி வீரமணிகண்டனின் மனைவியாவர். கடந்த 07.06.2020ம் தேதி என்தம்பி வெட்டுபட்டு இறந்துவிட்டார். அன்று 09.30 மணியளவில் என்தம்பி மனைவிக்கு வீரமணிகண்டன் வெட்டுபட்டு ரத்தவெள்ளத்தில் கிடப்பதாக போன்வந்தது. அதற்குஅப்புறம் நாங்கள் அனைவரும்போய் BC ஆஸ்டல் அருகில் போய் பார்க்கும்போது ரத்தவெள்ளத்தில் இறந்துகிடந்தார். கழுத்தின் பின்பக்கத்தின் வெட்டுபட்டு இருந்தது. வயிற்றில் குடல் வெளியே வந்திருந்தது. விரல் வெட்டு பட்டு இருந்தது. நாங்கள் போய் பார்க்கும்போது எதிரிகள் ஆனந்த், பார்த்தா, டால்டாகண்ணன், அய்யனார் வெட்டிவிட்டதாக பார்த்தவர்கள்

சொன்னார்கள். என்அக்கா ஷோபனா இந்த வழக்கு எதிரிகளுடன் என்தம்பி ராஜா பழக்கடையில் 8 மணிக்கு பேசிக்கொண்டிருந்ததை பார்த்ததாகவும், அதற்குள் வெட்டிவிட்டார்கள் என்று சொன்னார். அங்கிருந்தவர்கள் எதிரிகள் தான் வெட்டியதாக சொன்னார்கள். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>1, 2, 3 எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை:</u>**

என்வீடு என்தம்பி வீட்டிற்கு பக்கத்தில் உள்ளது. எனக்கு எப்படி தகவல் கிடைத்தது என்றால் அ.சா.1க்கு போன்மூலம் தகவல் வந்து அவர் என்னிடம் அழுது கொண்டே தகவல்சொல்லி விட்டு ஓடினார். ஷோபனா தனக்கு போன்மூலம் தகவல்சொன்னதாக அ.சா.1 சொன்னார். போலிசார் சம்பவதன்று இரவிலே கேட்டார்கள். என்தம்பி இறந்தஇடத்தில் விசாரித்தார்கள். அன்றே அரசு மருத்துவமனையிலும் விசாரித்தார்கள். அப்போது என்அக்கா ஷோபனா தான் என்தம்பி இறந்தவிவரத்தை அ.சா.1க்கு தகவல் சொன்னதாக நான் சொன்னேன். என்தம்பி இறந்துகிடந்த இடத்தில் நான், என்அம்மா, என்அக்கா மற்றும் அ.சா.1 போய் பார்த்தோம். சுமார் 09.30 மணியளவில் போய் பார்த்தோம். நான் பார்க்கும்போது என்தம்பியின் கழுத்தில் வெட்டுப்பட்டிருந்தது, குடல் வெளியே வந்திருந்தது மற்றும் விரல் வெட்டுபட்டு இருந்த விவரத்தை போலிசார் விசாரணையின் போது சொன்னேன். நாங்கள் அங்கு பார்த்து கொண்டிருக்கும்போது போலிசார் வந்துவிட்டார்கள். இந்த விவரத்தை போலிசார்விசாரணையின்போது சொன்னேன். போலிசார் விசாரணையின் போது நான் முதல்விசாரணையில் சொன்ன நபர்கள் என்தம்பியை அடித்து போட்டுவிட்டதாக சொன்னேன். யார் சொல்லி எதிரிகள் என்தம்பியை வெட்டியவர்கள் சொன்னார்கள் என்றால் அங்கிருந்தவர்கள் சொன்னார்கள். கூட விளையாடியவர்கள் சொன்னார்கள். அதில் கலைஞர், சித்திக் என்பவர்களும் உண்டு. மேற்படி கூடவிளையாடியவர்கள் சொல்லி எதிரிகள் சம்பவத்தில் ஈடுபட்ட விவரம் தெரியவந்ததாக போலிசார்விசாரணையில் சொன்னேன். என்அக்கா ஷோபனா இந்த வழக்கு எதிரிகளுடன் என்தம்பி ராஜா பழக்கடையில் 8 மணிக்கு பேசிக்கொண்டிருந்ததை பார்த்ததாகவும்,

அதற்குள் வெட்டிவிட்டார்கள் என்று சொன்னார் என்று போலிசார் விசாரணையின் போது சொன்னேன். ராஜா பழக்கடை எங்கு உள்ளது, அன்று அது திறந்திருந்ததா என்ற விவரத்தை போலிசார் விசாரிக்கும்போது சொன்னேன். பழைய பஸ்டாண்ட் அருகில் உள்ள காய்கறி மார்க்கெட்அருகில் ராஜா பழக்கடை உள்ளது. அன்று கடை திறந்திருந்தது என்று என்அக்கா சொன்னார். அதன்உரிமையாளர்கள் ராஜாவும், அவர் அம்மாவும் ஆவார்கள். 07.06.2020ம் தேதி கொரானா காலகட்டம் என்றும், அப்போது கடைகள் திறந்திருக்கவில்லை என்றால் சரியல்ல. இறந்தஇடத்தில் நாங்கள் இருக்கும்போது போலிசார் கையெழுத்து வாங்கினார்களா என்றால் அக்கா ஷோபனா போட்டிருப்பார். எந்த இடத்தில் என்தம்பி தாக்கப்பட்டார் என்று நான் தெரிந்துகொண்டேனா என்றால் BC ஆஸ்டல் உள்ளே தாக்கப்பட்டு என்தம்பி சுவரை தாண்டி வெளியேவரும்போது அதன்பின்னரும் தாக்கியுள்ளார்கள் என்று தெரிந்துகொண்டேன். அன்று ஆஸ்டல் திறந்திருந்தா, பூட்டியிருந்ததா என்றுஎனக்கு தெரியாது. ஆஸ்டல் உள்ளே யாரும் இருந்ததார்களா என்று எனக்கு தெரியாது. உள்ளே இருட்டாக இருந்தது. நான் உள்ளே போய் பார்க்கவில்லை. நான் அன்று காவல்நிலையம் போகவில்லை. நான் தற்போது நீதிமன்றத்தில் சொன்ன விவரத்தை தான் போலிசார்விசாரணையின்போது சொன்னேன். வழக்கு எதிரிகளுக்கும் சம்பவத்துக்கும் எந்த தொடர்பும் இல்லையென்றும் என்தம்பி மனைவி கொடுத்த புகாருக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

<u>4வது எதிரி தரப்புகுறுக்கு விசாரணை</u>

வழக்கு சம்பவம் தொடர்பாக அ.சா.1 தான் புகார் கொடுத்தேன். இந்த வழக்கு எதிரிகளை எனக்கு ஏற்கனவே தெரியும். அ.சா.1க்கும் எதிரிகளை தெரியும். இந்த வழக்கு எதிரிகள் 4பேர்தான் சம்பவத்தில் ஈடுபட்டுள்ளதாக கேள்விபட்டதாக அ.சா.1 என்னிடம் சொன்னார். அசா.1 கொடுத்த புகாரில் 3 எதிரிகளின் பெயரை குறிப்பிட்டு தான் கூறியுள்ளார் என்றால் அந்த விவரம் அவருக்கு தான் தெரியும்.

அ.சா.1 என்னுடைய உறவினர் என்பதால் அவரை அனுசரித்து சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை</u>**: இல்லை

Sd/-V.PADMANABHAN,
Principal District Judge,
Perambalur.